# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2313/37 - 2023 ජනවාරි මස 04 වැනි බදාදා - 2023.01.04

*2313/37 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/92* (iii)

**1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்**

*1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 34 ஆம், 44 ஆம் பிரிவுளுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 64 ஆம் பிரிவின் கீழ் சூழல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

Z. A. **நசீர் அஹமட்,**
*சுற்றாடல் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, சனவரி 03.*

**ஒழுங்குவிதிகள்**

*1993 ஆம் ஆண்டு நவெம்பர் 16 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுரங்கத்தொழில் (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*

(1) ஒழுங்குவிதி 4 இன் (9) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(9) (அ) பணியகமானது, படிவம் 2.1 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்களையும் ஆவணங்களையும் நுனித்தாரய்ந்த பின்னர், ஒன்றில் (1) ஆம் பந்தியின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை அங்கீகரிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) விண்ணப்பமொன்று பணியகத்தினால் அங்கீகரிக்கப்படுமிடத்தும், மற்றும் -

(i) விண்ணப்பகாரர், இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் மொத்தக் கனிப்பொருள்வள ஆய்வு நிதழ்ச்சித்திட்டத்துக்கான நிதிசார் முதலீடுபற்றிய எண்பிப்பை வழங்குமிடத்தும், பணியகமானது, கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன் பணியகத்தின் அலுவலக முறையான உரிமமளித்தற் கட்டுப்பாட்டு முறைமையில் கனிப்பொருள்வள ஆய்வு உரிமம் பெற்றவராக விண்ணப்பகாரரைப் பதிவுசெய்தலும் வேண்டும் ;

(ii) விண்ணப்பகாரக்கு நிதிசார் முதலீடுபற்றிய எண்பிப்பை வழங்குவதற்கான காலம் தேவையாகவுள்ளவிடத்தும், பணியகமானது, மூன்று மாதக் காலப்பகுதியொன்றுக்கான ஆரம்ப நிபந்தனையுடனான கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றை வழங்கலாமென்பதுடன் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் இலங்கை வர்த்தக வங்கியில் மொத்தக் கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்கான நிதிசார் முதலீடுபற்றிய எண்பிப்பை விண்ணப்பகாரர் வழங்கியவுடன், பணியகமானது, ஆரம்ப நிபந்தனையுடனான கனிப்பொருள்வள ஆய்வு உரிமத்தை ஒரு கனிப்பொருள்வள ஆய்வு உரிமமாக மாற்றி அதிகபட்சம் இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்கு அதனை நீடித்தலும் வேண்டும்.

(இ) பணியகத்தினால் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் உரிமம் அத்தகைய உரிமத் தேதியிலிருந்து நடைமுறையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமம் முடிவுறும் தேதியிலிருந்து ஒருதடவையில் ஓராண்டுக்கு அதிகபட்சம் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கவும்படலாம்.

(ஈ) பந்தி (1) இன்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று பணியகத்தினால் நிராகரிக்கப்படுமிடத்து, பணியகமானது, அத்தகைய நிராகரிப்பை விண்ணப்பகாரருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பகாரர், சட்டத்தின் 36 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள முறையில், பணியகத்தின் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடொன்றையும் செய்யலாம்.

(உ) பணியகத்தின விண்ணப்பகாரரொருவக்குச் செல்லுபடியான கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்று வழங்கப்படுகின்றமை எவ்வாறிருப்பினும், எந்தக் காணி தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் காணியின் இடப்பரப்பினுள் அமைந்துள்ள ஒரு தனியார் காணியின் சொந்தக்காரர் ஒருவர் கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றின்றின்கீழ் ஒரு மூன்றாந்திறத்தவருக்கு அதே வலையலகு முன்னர் வழங்கப்பட்டுள்ளதென்ற நிகழ்வைப் பொருட்படுத்தாது, ஆகக்குறைந்தது குறைந்தபட்ச வலையலகுத் தொகைக்கேனும் சமமாகவுள்ள கொடுப்பனவுடன் சேர்த்து பொருளளவில் படிவம் 2.1 இல் தனது சொந்தக்காணியைக் கனிப்பொருள்வள ஆய்வுசெய்வதற்குப் பணியகத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்."

(2) நான்காம் ஒழுங்குவிதியின் (10) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(10) கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றை வைத்திருப்பவர், பாகம் III இல் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொழில்நுட்ப வேலையைப் புரிதல் வேண்டும் அல்லது புரியச்செய்தல் வேணடும். அத்தகைய எல்லாத் தொழில்நுட்ப வேலைகளும் ஆவணப்படுத்தப்பட்டு அத்தகைய உரிமம் முடிவுறும் திகதிக்கு முன்னர் அங்கீகாரத்துக்காகப் பணியகத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். புரியப்பட்ட ஏற்றுக்கொள்தகு தொழில்நுட்ப வேலையின் வருடாந்த அல்லது குறைந்தபட்சப் பெறுமதி பின்வருமாறாதல் வேண்டும் :-

மீற்றர்முறை வலையலகுகள் (எம்ஜீயு)

இடப்பரப்புகளின் கனிப்பொருள்வள ஆய்வுக்காக

| கால எல்லை | ஆண்டொன்றுக்கு ஒரு எம்ஜீயுஇன் பெறுமதி (ரூபா) |
|---|---|
| 1 ஆம் 2 ஆம் ஆண்டு | 1,000,000.00 |
| 1 ஆவது புதுப்பித்தல் - 3 ஆம் ஆண்டு | 1,500,000.00 |
| 2 ஆவது புதுப்பித்தல் - 4 ஆம் ஆண்டு | 2,000,000.00 |
| 3 ஆவது புதுப்பித்தல் - 5 ஆம் ஆண்டு | 2,000,000.00 |

(3) நான்காம் ஒழுங்குவிதியின் (13) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(14) (அ) ஒரு கனிப்பொருள்ளவள ஆய்வு உரிமத்தைக் கைமாற்றுவதற்கான விண்ணப்பமொன்று, 35 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பக்கட்டணத்துடன் சேர்த்து ஒரு விண்ணப்பகாரரினால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் நேரில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் பொருளளவில் படிவம் 2.4 இல் இருத்தலும் வேண்டும். ஒரு கனிப்பொள்வள ஆய்வு உரிமத்தின் கைமாற்றுகைக்கான விண்ணப்பமானது அத்தகைய கனிப்பொருள்வள ஆய்வு உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து ஆறுமாதக் காலப்பகுதியின் பின்னர் மட்டுமே பணியகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒரு கனிப்பொருள்வள ஆய்வு உரிமத்தைக் கைமாற்றுவதற்கான விண்ணப்பமொன்று பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் பணியகமானது, அத்தகைய கைமாற்றுகை நேரத்தில் கைமாற்றுபவரின் விளைவுட்பட, அத்தகைய கைமாற்றம் பெறுபவரினால் புரியப்படவேண்டிய கனிப்பொருள்வள ஆய்வுச் செயற்பாடுகள் தொடர்பில், பணியகத்துக்கு எல்லாமடங்கிய முன்வைப்பொன்றை செய்யும்படி அத்தகைய உரிமத்தின் கைமாற்றம் பெறுபவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(இ) கைமாற்றம் பெறுபவரினால் செய்யப்பட்ட முன்வைப்பில் உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வுச் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாகவிருப்பின், மற்றும் உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு வேலை நிகழ்ச்சித்திட்டம், உரிமம் செல்லுபடியாகவுள்ள எஞ்சிய காலப்பகுதிக்காகத் தொடரப்படுதல் வேண்டுமெனப் பணியகம் விதந்துரைப்பின், பணியகமானது அத்தகைய கனிப்பொருள்வள ஆய்வு உரிமத்தின் கைமாற்றற் சாதனத்தை அங்கீகரித்தல் வேண்டும்.

(ஈ) கைமாற்றற் சாதனம் பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு கைமாற்றம் பெறுபவரின் பெயர், கனிப்பொருள்வள ஆய்வு உரிமம்பெற்றவராக அலுவலகமுறையான உரிமமளித்தல் கட்டுப்பாட்டு முறைமையில் பதிவுசெய்யப்பட்டவுடன், அத்தகைய உரிமத்தின் நிபந்தனைகள், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட உரிமைகளும் கடப்பாடுகளும் உட்பட, அத்தகைய கனிப்பொருள்வள ஆய்வு உரிமம்பெற்றவருக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும். உரிமத்தின் நிபந்தனைகளும் அதுதொடர்பான ஏனைய தேவைப்பாடுகளும். பணியகத்தின் அங்கீகாரத்துடன் கைமாற்றத்தின்போது மாற்றப்படலாம்.

(உ) உரிமம்பெற்றவர், கனிப்பொருள்வள ஆய்வு பூர்த்திசெய்யப்பட்ட அல்லது கனிப்பொருள்வள ஆய்வு உரிமம் முடிவுற்ற தேதியிலிருந்து இரண்டாண்டுகளினுள் ஒரு சுரங்கத்தொழில் உரிமத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் சுரங்கத்தொழில் உரிமத்தின் விண்ணப்பகாரர், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த உத்தேசிக்கப்பட்ட கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ஆகக்குறைந்தது 20 சதவீதத்துக்கான நிதிசார் முதலீடுபற்றிய எண்பிப்பையேனும் சமர்ப்பித்தல் வேண்டும். இயல்திற இடப்பரப்பை வைத்திருப்பதற்கானவொரு கோரிக்கையை இயைபான கட்டணத்துடன் சேர்த்து உரிமம்பெற்றவர் சமர்ப்பித்துள்ளவிடத்து, அவ்வாறு வைத்திருக்கப்பட்ட காலப்பகுதியின்போது கனிப்பொருள்வள ஆய்வுக்கான வேறேதேனும் விண்ணப்பத்தைப் பணியகம் கவனத்துட்கொள்ளுதலாகாது.

(4) ஒழுங்குவிதி 32 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"32. (1) பின்வருவோரிவோரிடமிருந்து ஒரு கனிப்பொருள்வள ஆய்வு, சுரங்கத்தொழில், வியாபார அல்லது ஏற்றுமதி உரிமத்தின்கீழ் அகழப்பட்ட, பதனிடப்பட்ட, விற்பனைசெய்யப்பட்ட, ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது வேறுவகையில் கொள்ளப்பட்ட எல்லாக் கனிப்பொருட்கள் தொடர்பிலும் வேத்துரிமைகளைக் கோருவதற்கான, பெறுவதற்கான மற்றும் அறவிடுவதற்கான தத்துவத்தைப் பணியகம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உயர்தரக் கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து, பணியகத்தின் அங்கீகாரத்துடன் கனிப்பொருட்களை அகற்றுகின்ற கனிப்பொருள்வள ஆய்வு உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்து;

(ஆ) விற்பனைக்குமுன்னர் கனிப்பொருட்களை அகழ்கின்ற அல்லது பதனிடுகின்ற, அல்லது அத்தகைய கனிப்பொருட்களை ஓரளவு செய்துமுடிக்கப்பட்ட அல்லது செய்துமுடிக்கப்பட்ட தயாரிப்புகளாக ஒன்றிணைக்கின்ற அல்லது மாற்றுகின்ற, அல்லது அத்தகைய கனிப்பொருட்களை நுகர்கின்ற அல்லது அவற்றை ஏற்றுமதிசெய்கின்ற சுரங்கத்தொழில் உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்து ;

(இ) ஒரு சுரங்கத்தொழில் அல்லது வியாபார உரிமம் வைத்திருப்பவரினால் பதனிடப்பட்டிராத கனிப்பொருட்களைக் கொள்வனவு செய்கின்றவரும் மற்றும் விற்பனைக்கு அல்லது ஏற்றுமதிக்கு முன்னர் அத்தகைய கனிப்பொருட்களைப் பதனிடுகின்றவரும் அல்லது அதன் பதனிடப்பட்ட அல்லது பதனிடப்படாத கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்கின்றவருமான வியாபார உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்து.

(2) பந்தி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைக் காட்டுகின்றவையும் ஒரு சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்டவையுமான கனிப்பொருட்கள் பற்றிய குறிப்பிட்ட கணக்குப் புத்தகங்களைப் பேணுதல் வேண்டும் :-

(அ) எல்லாக் கனிப்பொருள் அகழ்வுச் செயற்பாடுகளும் பற்றிய காலவரிசைப்படியான பதிவேட்டுடன், அகழப்பட்ட பொருட்களின் அளவுகள் ;

(ஆ) வயாபார உரிமங்களை வைத்திருப்போரின் ஆலை அல்லது வேறு பதனிடுதற் பொறித்தொகுதிகளிலிருந்தான விற்பனைப் பதிவேடுகள் அல்லது கடன்பத்திர அல்லது தந்திவழிக் கைமாற்றுகையின் விபரங்கள் ;

(இ) செலுத்தப்படற்பாலதான வேத்துரிமைத் தொகையை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அவசியமென ஆணையாளர் தலைமையதிபதியினால் முடிபுசெய்யப்பட்ட வேறெல்லா நிகழ்வுகளும் சூழ்நிலைகளும்; அல்லது

(ஈ) ஒதுக்கு மதிப்பீடு."

(5) அவ்வொழுங்குவிதியின் 33 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"33. (1) படிவங்கள் 1.2, 3.2, 3.3, 4.2, 5.2, 6, 11, 13 மற்றும் 14 என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறாக வேத்துரிமையாகச் செலுத்தப்படற்பாலதான தொகையைக் கணக்கிடுவதற்கும் அதனைக் கொடுப்பனவு செய்வதற்குமான நோக்கத்துக்காக, ஏதேனும் காலப்பகுதியின்போது ஒரு சுரங்கத்தின் வெளியீட்டுப் பெறுமதியானது -

(அ) விற்பனைப் பதிவேடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறு, வெளியீட்டின் உள்ளபடியான சந்தைப் பெறுமதியாதல் வேண்டும்; அல்லது

(ஆ) உள்ளபடியான சந்தைப்பெறுமதியை நிச்சயிப்பதற்குத் தெளிவான வழிவகைகள் எவையும் இல்லாதவிடத்து அல்லது நிலைநாட்டப்பட்ட சந்தைப் பெறுமதியெதுவும் இல்லாதவிடத்து, படிவம் 14 இல் அனுமதிக்கப்பட்ட சரிசமவீதப்படியான கழிப்பனவுகளைக் கழித்து, வெளியீட்டின் பெறுமதியைக் குறிக்கின்றதாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட தொகையாதல் வேண்டும்.

(2) (அ) 32 ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறாக வேத்துரிமைகளைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஓர் உரிமம்பெற்றவர் அல்லது ஓர் ஏற்றுமதியாளர், அத்தகைய உரிமம் வழங்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய உரிமத்தின்கீழ் செலுத்தப்படற்பாலனவான வேத்துரிமைகளுக்கெதிராக "பணியகத்தினால் தீர்மானிக்கப்பட்ட முற்பண வேத்துரிமைக் கொடுப்பனவு" ஒன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய உரிமங்களின்கீழ் செலுத்தப்படற்பாலனவான வேத்துரிமைகளுக்கெதிரான "முற்பண வேத்துரிமைக் கொடுப்பனவின்" தொகையைப் பணியகம் தீர்மானித்தல் வேண்டும்;

(ஆ) பணியகத்தின் விசேட அதிகாரவளிப்புடன் கனிப்பொருட்களை ஏற்றுமதிசெய்கின்ற சுரங்கத்தொழில், வியாபார எற்றுமதி அல்லது கனிப்பொருள்வள ஆய்வு உரிமங்களை வைத்திருப்போர் கணக்கிடப்பட்டவாறு வேத்துரிமைகளின் கொடுப்பனவுடன் சேர்த்து பொருளளவில் படிவம் 14 இல் விபரமான காலாண்டுக் கூற்றொன்றை வழங்குதல் வேண்டும். வேத்துரிமைகளின் அத்தகைய காலாண்டுக் கொடுப்பனவு பின்வரும் முறையில் பணியகத்துக்குச் செய்யப்படுதல் வேண்டும் :-

| காலாண்டு | முடிவடையும் தேதி | எத்தினத்தன்று அல்லது எத்தினத்துக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் |
|---|---|---|
| முதலாவது | மாச்சு 31 | ஏப்பிறல் 30 |
| இரண்டாவது | யூன் 30 | யூலை 31 |
| மூன்றாவது | செத்தெம்பர் 30 | ஒற்றோபர் 31 |
| நான்காவது | திசெம்பர் 31 | சனவரி 31 (அடுத்துவரும் ஆண்டு) |

(இ) வேத்துரிமைகளின் காலாண்டுக் கொடுப்பனவில் தவணை தவறுகையொன்று ஏற்படுமிடத்து அத்தகைய கொடுப்பனவுகள், செலுத்தப்படற்பாலதான வேத்துரிமையின் இருபது சதவீதத்துக்குச் சமமானவொரு குற்றப்பணத்துக்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்டவாறு உரிய தேதியிலிருந்து இரண்டு மாத காலப்பகுதியொன்றினுள் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) (அ) இவ்வொழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பணியகமானது, அதன் தற்றுணிபில், (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வேத்துரிமைகளின் அத்தகைய தவணைதவறிய கொடுப்பனவுகள் முழுமையாகச் செலுத்தப்பட்டிராதவிடத்து, மூன்றுமாத காலப்பகுதியொன்றுக்கு உரிமத்தை இடைநிறுத்தலாம்.

(ஆ) (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வேத்துரிமைகளின் அத்தகைய தவணைதவறிய கொடுப்பனவுகள் முழுமையாகச் செலுத்தப்பட்டிராதவிடத்து, பணியகமானது, அதன் தற்றுணிபில், உரிமத்தை இல்லாதாக்கலாம் அல்லது அதன் புதுப்பித்தலை நிராகரிக்கலாம்.

(4) சுரங்க வெளியீட்டின் விற்பனைகளிலிருந்தான அல்லது தீர்மானிக்கப்பட்ட சந்தைப் பெறுமதியிலிருந்தான வேத்துரிமைகள், கனிப்பொருள் முதலீட்டு உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்பட்டாலொழிய, பின்வருமாறு அப்பெறுமதியின் நூற்றுவீதமாக இருத்தல் வேண்டும்:-

| | |
|---|---|
| அரும் உலோகங்கள் (ஏற்றுமதி செய்யப்படாதவை)<br>அரும் உலோகங்கள் (ஏற்றுமதி செய்யப்பட்டவை) | 15 சதவீதம் |
| கைத்தொழிற் கனிப்பொருட்கள் (ஏற்றுமதி செய்யப்படாதவை) | 7 சதவீதம |
| கைத்தொழிற் கனிப்பொருட்கள் (ஏற்றுமதி செய்யப்பட்டவை) | 9 சதவீதம் |
| கட்டிடப்பொருட்கள் | பணியகத்தினால் வருடாந்தம் தீர்மானிக்கப்படும் நிர்ணயிக்கப் பட்ட அலகு வீதம் |
| உருவளவைக் கல் (ஏற்றுமதி செய்யப்படாதது) | 7 சதவீதம் |
| உருவளவைக் கல் (ஏற்றுமதி செய்யப்பட்டது) | 9 சதவீதம் |
| மூல உலோகங்களும் ஏனைய உலோகங்களும் (ஏற்றுமதி செய்யப்படாதவை) | 7 சதவீதம் |
| மூல உலோகங்களும் ஏனைய உலோகங்களும் (ஏற்றுமதி செய்யப்பட்டவை) | 9 சதவீதம் |

(5) பணியகமானது, முதலீட்டு உடன்படிக்கையின் கட்டுக்கோப்பினுள் சுரங்க வெளியீட்டின் சந்தைப்பெறுமதி, வேத்துரிமையின் நூற்றுவீதம், அனுமதிக்கத்தக்க கழிப்பனவுகள் மற்றும் வேத்துரிமைக் கொடுப்பனவு ஒழுங்கேற்பாடுகள் என்பவற்றைத் தீர்மானிக்கலாம்.

(6) பணியகத்தினால் தீர்மானிக்கப்பட்ட அலகு அல்லது சந்தைப் பெறுமதிகள் ஒவ்வோராண்டும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்'';

(6) ஒழுங்குவிதி 35 இன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''35. (1) சட்டத்தின் 44 ஆம் பிரிவைப் பின்பற்றிச் செலுத்தப்படற்பாலதான கட்டணமானது பின்வரும் முறையில் கணக்கிடப்படுதல்வேண்டும்:-

| | |
|---|---|
| சிறுகைத்திறன் கனிப்பொருள் உரிமத்தை வழங்குதலும் புதுப்பித்தலும்: | |
| வகுதி ''அ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 5000 |
| வகுதி ''ஆ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 2000 |
| கைத்தொழிற் கனிப்பொருள் ஆய்வு உரிமத்தை வழங்குதலும் புதுப்பித்தலும்: | |
| வகுதி ''அ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 50,000 |
| வகுதி ''ஆ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 30,000 |
| வகுதி ''இ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 10,000 |
| வகுதி ''ஈ'' | கெக்ரேயருக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 5,000 |
| கரைகடந்த கடல் மண்ணுக்கான பதிவு, சுரங்கத் தொழில் உரிமக் கட்டணத்தின் பதிவுக் கட்டணத்தினது 50% ஆகும் | |
| கனிப்பொருள்வள ஆய்வு உரிமத்தின் வழங்குகை | ஆண்டொன்றுக்கு / ஒரு எம்ஜீயுவுக்கு/ ஒரு கனிப்பொருளுக்கு ரூபா 100,000 |
| முதலாவது புதுப்பித்தல் (ஆண்டு 2 இன் முடிவு) | ஆண்டொன்றுக்கு/ ஒரு எம்ஜீயூ வுக்கு/ஒரு கனிப்பொருளுக்கு ரூபா 100,000 |
| இரண்டாவது புதுப்பித்தல் (ஆண்டு 3 இன் முடிவு) | ஆண்டொன்றுக்கு/ ஒரு எம்ஜீயூ வுக்கு/ஒரு கனிப்பொருளுக்கு ரூபா 125,000 |
| மூன்றாவது புதுப்பித்தல் (ஆண்டு 4 இன் முடிவு) | ஆண்டொன்றுக்கு/ ஒரு எம்ஜீயூ வுக்கு/ஒரு கனிப்பொருளுக்கு ரூபா 150,000 |
| ஒதுக்கப்பட்ட கனிப்பொருள் உரிமத்தை வழங்குதலும் வருடாந்தம் புதுப்பித்தலும்: | ரூபா 10,000 கெக் |
| வியாபார உரிமத்தை வழங்குதலும் புதுப்பித்தலும் : | |

| | | |
|---|---|---|
| வகுதி ''அ'' | ரூபா 15,000 | ஆண்டொன்றுக்கு |
| வகுதி ''ஆ'' | ரூபா 8,000 | |
| வகுதி ''இ'' | ரூபா 2,000 | |

| | |
|---|---|
| போக்குவரத்து உரிமத்தை வழங்குதல் | ரூபா 250 |
| ஏற்றுமதி உரிமத்தை வழங்குதல் | ரூபா 7500 |
| ஒரு சுரங்கத்தொழில் உரிமத்தின் உரித்தைக் கைமாற்றுதல் | ரூபா 100,000 |
| கனிப்பொருள் உரித்துத்தொடர்பான ஏதேனும் ஆவணத்தின் ஒவ்வொரு தேடுகையிடுகைக்காகவும் | ரூபா 1000 |
| ஏதேனும் உரிமத்தின் அல்லது வேறு ஆவணங்களின் ஒவ்வொரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிக்காகவும் | ஒரு பக்கத்துக்கு ரூபா 1,000 |
| நிரற்படுத்தப்படாத நானாவிதச் சேவைகளுக்காக;<br>ஒரு கனிப்பொருள்வள ஆய்வு உரிமத்தின் உரித்தை கைமாற்றுதல் | ஒவ்வொரு விடயத்திலும் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகை<br>ஒரு எம்ஜீயுவுக்கு ரூபா 100,000 |
| வைத்திருத்தற் கட்டணம் | ஆண்டொன்றுக்கு/ஒரு சதுர கிலோமீற்றருக்கு/கனிப்பொருளுக்கு ரூபா 200,000 |
| ஓர் ஆபரண மாதிரியை வெளிநாட்டுக்கு அனுப்புவதனை அனுமதிக்கின்ற கடிதம் | ரூபா 5,000 |
| ஒரு கனிப்பொருள் மாதிரியை வெளிநாட்டுக்கு அனுப்புவதனை அனுமதிக்கின்ற கடிதம் | ரூபா 5,000 |
| கனிப்பொருள்வள ஆய்வுக்கான மீளளிக்கப்படத்தக்கதல்லாத செய்முறைப்படுத்தற் கட்டணம் (ஒரு கோரிக்கைக்கு) | ரூபா 10,000 |

(7) படிவங்கள் 2.1, 2.2 மற்றும் 9 என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக முறையே பின்வரும் படிவங்களை இடுவதன்மூலமும் :-

(ஒழுங்குவிதி 4 (1)

படிவம் 2.1

**கனிப்பொருள்வள ஆய்வு உரிமம்**

விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் விபரங்கள்:

(அ) தனியாள்

(i) முழுப்பெயர் :

(ii) தேசிய அடையாள அட்டை இல. :

(iii) நாட்டினம் :

(iv) பிறந்த தேதி :

(v) முகவரி :

(vi) தொலைபேசி இலக்கங்கள் :

(அ) நிலையான தொலைபேசி -

(ஆ) கையடக்கத் தொலைபேசி -

(இ) தொலைநகல் -

(vii) மின்னஞ்சல் :

(viii) உயர்தொழில் :

(ix) தொழிலுக்கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிலான பதவிப்பெயர்:

(x) தொழில்தருநரின் பெயர் :

(xi) முகவரி :

(xii) தொலைபேசி இலக்கங்கள் :

(அ) நிலையான தொலைபேசி -

(ஆ) கையடக்கத் தொலைபேசி -

(இ) தொலைநகல் -

(xiii) மின்னஞ்சல் :

(xiv) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமைபற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) முன்னைய 6 மாத விபரங்களுடன் ஒரு நடப்பு வங்கிக்கூற்று

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனிக்காக :

(i) பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் பெயரும் பதிவிலக்கமும்:

(அ) முகவரி :

(ஆ) தொலைபேசி :

(அ) நிலையான தொலைபேசி -

(ஆ) கையடக்கத் தொலைபேசி -

(இ) தொலைநகல் -

(இ) மின்னஞ்சல் :

(ii) சட்ட/நிதிசார் தரவுகள்:

(அ) கம்பனிகள் பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதி (ROC)

(ஆ) பணிப்பாளர்களும் பங்குதாரர்களும் பற்றிய விபரங்கள் - இணைக்கவும் கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2)

கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 15 இன் பிரதி (கடைசி வருடாந்த விபரத்திரட்டு)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 20 இன் பிரதி (ஏற்புடையதாயின்)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 13 இன் பிரதி

(இ) மூலதனமாக்குதல் -

(ஈ) அமைப்பக விதிகள் -

(உ) கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகள் (இணைக்கவும்)

(ஊ) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமை பற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) ஒரு பட்டயம்பெற்ற கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நடப்பு நிதிசார் கூற்றொன்று முன்னைய 6 மாத விபரங்களுடன் நடப்பு வங்கிக்கூற்றொன்று

(எ) பங்குவைத்திருக்கை - உள்நாட்டு : .......% வெளிநாட்டு .......%

(ஏ) பங்குதாரர் ஒரு கம்பனியாகவிருப்பின், பின்வருவனவற்றை இணைக்கவும்:
பதிவுச்சான்றிழ் கூட்டிணைக்கப்பட்ட நாடு பணிப்பாளர்களும்
பங்குதாரர்களும் பற்றிய விபரங்கள்
படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2)
படிவம் 15 இன் பிரதி (கடைசி வருடாந்த விபரத்திரட்டு)

2. கனிப்பொருள்வள ஆய்வு செய்யப்படுவதற்கு நாடப்பட்ட கனிப்பொருட்களின் அத்துடன்/அல்லது கனிப்பொருளைக் கொண்டுள்ள பதார்த்தங்களின் பெயர்கள்;

3. தொழில்நுட்ப/உயர்தொழில்சார் தரவுகள் ;
   (அ) கோரப்பட்ட இடப்பரப்பின் மெற்றிக் பெயர்குறிப்பு (1:50,000 அளவினதான அமைவிடத்தையும் மீற்றர்முறை வலையலகுகளின் இனங்காணலையும்) படிவம் 2.3 இணைக்கவும்
   (ஆ) கருத்திட்டக் குழுவினரின் உயர்தொழில்சார் /தொழில்நுட்ப நிபுணத்துவம் (எல்லாக் குழுவுறுப்பினர்களினதும் சுயவிபரக் கோவைகளை இணைக்கவும்) -

4. உரிமக்கட்டணப் பற்றுச்சீட்டு (இணைக்கவும்) ;

கீழே கையொப்பமிட்டுள்ள .......... ஆகிய நான்/ நாம் எனது/ எமது அறிவுக்கெட்டியவரை இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கூற்றுக்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/றோம் என்பதுடன் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் பொறுப்பேற்கின்றேன்/றோம். 1 முதல் 4 வரையிலான விடயங்கள் உட்பட இதன்கண் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுக்கான எவையேனும் மாற்றங்களை, அத்தகைய மாற்றம் இடம்பெற்றதிலிருந்து பதினான்கு (14) பஞ்சாங்க நாட்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிப்பதற்கும் நான்/நாம் இத்தாற் பொறுப்பேற்கின்றேன்/றோம்.

..............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

பெயர்:-
பதவிப்பெயர்:-
திகதி :-

5. அலுவலகமுறையான பற்றுச்சீட்டு/உரிமம் பெறப்படவுள்ளது ;

   (அ) அதிகாரமளிக்கும் அலுவலர் -
      (i) கையொப்பமும் திகதியும் -
      (ii) பெயர் :-
      (iii) பதவிப்பெயர் -
   (ஆ) நுனித்தாராய்ந்தவர் :- (விண்ணப்பத்தின் அதிகாரவளிப்புத் தேதியிலிருந்து 45 நாட்களினுள் நிரப்பப்படுதல் வேண்டும்)
      (i) கையொப்பமும் திகதியும் -
      (ii) பெயர் :-
      (iii) பதவிப்பெயர் -

---

**அலுவலகமுறையான பாவனைக்காக மட்டும்**

கனிப்பொருள்வள ஆய்வு உரிம இல. :-
அனுமதிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு இடப்பரப்பு (சதுர கிலோமீற்றர்களில் (கிமீ$^2$) அல்லது ஒரு கிமீ$^2$ க்குக்குறைவாக இருப்பின் சதுர மீற்றர்களில் (மீ$^2$)) :-

விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டது/மறுக்கப்பட்டது.

பணிப்பாளர் தலைமையதிபதி
கையொப்பமும் திகதியும்:

(ஒழுங்குவிதி *4 (1)*
படிவம் *2.2*

**கனிப்பொருள்வள ஆய்வு உரிமம்**

(முடிவுறுதல் தேதிக்கு ஆகக்குறைந்தது அறுபது (60) நாட்களுக்கு முன்னரேனும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இதன்கண் வழங்கப்பட்ட தகவல்கள், தொழிற்பாடுகளின் பத்து (10) மாதங்களுக்குக் குறைவாகவிருத்தலுமாகாது.)

***(காலந்தாழ்த்திய சமர்ப்பணங்கள் மாதமொன்றுக்கு விண்ணப்பக் கட்டணத்தின் 10% மிகைக்கட்டணமொன்றுக்கு உட்படும்)***

புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்

*1.* உரிம இல. :-
*2.* புதுப்பித்தல் ஆண்டு :

முதலாவது ☐ இரண்டாவது ☐ மூன்றாவது ☐

(இயைபான பெட்டியில் இடவும்)

*3.* விண்ணப்பகாரரின் விபரங்கள் (மாற்றங்கள் மட்டும்) :

(அ) தனியாள் :
(i) முழுப்பெயர் :
(ii) தேசிய அடையாள அட்டை இல. :
(iii) நாட்டினம் :
(iv) பிறந்த திகதியும் தற்போதைய வயதும் :
(v) முகவரி :
(vi) தொலைபேசி இலக்கங்கள் :
(அ) நிலையான தொலைபேசி -
(ஆ) கையடக்கத் தொலைபேசி -
(அ) தொலைநகல் -
(vii) மின்னஞ்சல் :
(viii) உயர்தொழில் :
(ix) தொழிலுக்கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிலான பதவிப்பொயர்:
(x) தொழில்தருநரின் பெயர் :
(xi) முகவரி :
(xii) தொலைபேசி இலக்கங்கள் :
(அ) நிலையான தொலைபேசி -
(ஆ) கையடக்கத் தொலைபேசி -
(இ) தொலைநகல் -
(xiii) மின்னஞ்சல் :
(xiv) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமைபற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) முன்னைய 6 மாத விபரங்களுடன் ஒரு நடப்பு வங்கிக்கூற்று

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனிக்காக :
(i) பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் பெயரும் பதிவிலக்கமும்:
(ii) முகவரி :
(iii) தொலைபேசி :
(அ) நிலையான தொலைபேசி -
(ஆ) கையடக்கத் தொலைபேசி -
(இ) தொலைநகல் -
(iv) மின்னஞ்சல் :
(v) சட்ட/நிதிசார் தரவுகள்:
(அ) கம்பனிகள் பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட பதிவுச்சான்றிதழின் பிரதி (ROC)

(ஆ) பணிப்பாளர்களும் பங்குதாரர்களும்பற்றிய விபரங்கள் - இணைக்கவும் கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 15 இன் பிரதி
(கடைசி வருடாந்த விபரத்திரட்டு)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 20 இன் பிரதி (ஏற்புடையதாயின்)
கம்பெனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 13 இன் பிரதி

(இ) மூலதனமாக்குதல் -

(ஈ) அமைப்பக விதிகள் -

(உ) கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வுசெய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகள் (இணைக்கவும்)

(ஊ) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமைபற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) ஒரு பட்டயம்பெற்ற கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நடப்பு நிதிசார் கூற்றொன்று முன்னைய 6 மாத விபரங்களுடன் நடப்பு வங்கிக்கூற்றொன்று

(எ) பங்குவைத்திருக்கை - உள்நாட்டு : .......% வெளிநாட்டு .......%

(ஏ) பங்குதாரர் ஒரு கம்பனியாகவிருப்பின், பின்வருவனவற்றை இணைக்கவும்:
பதிவுச்சான்றிழ் - /கூட்டிணைக்கப்பட்ட நாடு பணிப்பாளர்களும் பங்குதாரர்களும் பற்றிய விபரங்கள் படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2) படிவம் 15 இன் பிரதி (கடைசி வருடாந்த விபரத்திரட்டு)

4. தொழில்நுட்ப/உயர்தொழில்சார் தரவுகள் :

(அ) கைதுறக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடப்பரப்பின் மீற்றர்முறைப் பெயர்குறிப்பு (மீற்றர்முறை வலையலகுகளுடனான படத்தை இணைக்கவும்) -

(ஆ) கிமி $^2$ இல் அல்லது மீ $^2$ இல் வைத்திருக்கப்படவேண்டிய இடப்பரப்பின் மீற்றர்முறைப் பெயர்குறிப்பு -

(இ) உயர்தொழில்சார்/தொழில்நுட்பக் கருத்திட்டக் குழுவினர் (புதிய குழுவுறுப்பினர்களின் சுயவிபரக் கோவைகளை இணைக்கவும்)-

5. தொழில்நுட்ப வேலையறிக்கை (இணைக்கவும்) :

6. வேலைச் செலவினம் :

(அ) வைத்திருக்கப்படவேண்டிய இடப்பரப்பின் மீற்றர்முறைப் பெயர்குறிப்பு (மீற்றர்முறை வலையலகுகளுடனான படத்தை இணைக்கவும்) -

(ஆ) தொழில்நுட்ப வேலையறிக்கையிலிருந்து பெறப்பட்டவாறு ஈட்டப்பட்ட தொழில்நுட்ப வேலை வரவுகள் -

(இ) கோரப்பட்ட அலகுகளுக்கான உரித்தை வைத்திருப்பதற்குத் தேவைப்பட்டதொழில்நுட்ப வேலை வரவுகள் -

(ஈ) கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப வேலை வரவுகள் -

(உ) கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப வேலை வரவுகளின் மொத்தப் பெறுமதி -

(ஊ) முன்னெடுத்துச் செல்லப்பட்ட தொழில்நுட்ப வேலை வரவுகள் -

(எ) தொழில்நுட்ப வேலை வரவுகள் போதாமையாகவிருக்குமிடத்து செய்யப்பட்ட குறைபாட்டுக் காசுக் கொடுப்பனவு-

7. உரிமக்கட்டணப் பற்றுச்சீட்டு (இணைக்கசுவும்);

கீழே கையொப்பமிட்டுள்ள .......... ஆகிய நான்/ நாம், எனது/ எமது அறிவுக்கெட்டியவரை இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கூற்றுக்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/றோம் என்பதுடன் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் பொறுப்பேற்கின்றேன்/றோம். இதன்கண் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுக்கான எவையேனும் மாற்றங்களை, அத்தகைய மாற்றம் இடம்பெற்றதிலிருந்து பதினான்கு (14) பஞ்சாங்க நாட்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிப்பதற்கும் நான்/நாம் இத்தாற் பொறுப்பேற்கின்றேன்/றோம்.

..............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

பெயர்:-
பதவிப்பெயர்:-
திகதி :-

*அலுவலகமுறையான பாவனைக்காக மட்டும்*

அ. உரிமத்தின் எல்லா நியதிநிபந்தனைகளும் திருப்திசெய்யப்பட்டுள்ளன/ திருப்திசெய்யப்படவில்லை ; ஆதலால் .......... என்ற கோரப்பட்ட இடப்பரப்பை [சதுர கிலோமீற்றர்களில் (கிமி $^2$ ) அல்லது ஒரு கிமி $^2$ க்குக் குறைவாகவிருப்பின் சதுர மீற்றர்களில் (மீ $^2$)] மேற்கொண்ட கனிப்பொருள்வள ஆய்வுக்காக விதந்துரைக்கமுடியும்/விதந்துரைக்கமுடியாது.

நுனித்தாராய்ந்தவர் :- (இவ்விண்ணப்பம் பெறப்பட்ட இருபத்தொரு (21) நாட்களினுள் நிரப்பப்படுதல் வேண்டும்)

(i) கையொப்பமும் திகதியும் :-
(ii) பெயர்:-
(iii) பதவிப்பெயர்:-

ஆ. விண்ணப்பிக்கப்பட்டவாறான புதுப்பித்தல் விதந்துரைக்கப்படுகின்றது/ விதந்துரைக்கப்படவில்லை அதிகாரமளிக்கும் அலுவலர் :-

(i) கையொப்பமும் திகதியும் :-
(ii) பெயர்:-
(iii) பதவிப்பெயர்:-

இ. புதுப்பித்தலுக்கான முதலாவது/இரண்டாவது/மூன்றாவது (இறுதி) விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுகின்றது/மறுக்கப்படுகின்றது.

(ஒழுங்குவிதி 4 (1)
படிவம் 9

**கனிப்பொருள்வள ஆய்வு உரிமம் விண்ணப்பம்**

**உயர்தரக் கனிப்பொருள்வள ஆய்வு முன்னிலைமீட்புத் திட்டம்**

கனிப்பொருள்வள ஆய்வு உரிம இல. :

எல்லா உயர்தரக் கனிப்பொருள்வள ஆய்வு முன்னிலைமீட்புத் திட்டங்களும் இயைபான வரைபடங்களினாலும் படங்களினாலும் ஆதாரப்படுத்தப்பட்ட பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) உத்தேசிக்கப்பட்ட இடத்தினதும் அகழ்தல் செயற்பாடுகளினதும் அமைவிடம் :
(2) எல்லா அகழ்தல்களினதும் அளவும் விவரணமும் (அகழி, குழி, திறவைக்குழிச் சுரங்கம், சுரங்கப்பாதை, இறக்கச்சரிவு, நீர்வெளியேற்றல் முதலியன)
(3) திட்டமிடப்பட்ட எல்லா அகழ்தற் செயற்பாடுகளையும் முன்னிலைமீட்பு வேலையையும் ஒரு காண்ட் விளக்கப்படமாக முன்வைக்கவும்:
(4) உத்தேசிக்கப்பட்ட எல்லாத் தற்காலிக நிர்மாணங்களும் பற்றிய விபரங்களைத் தரவும்.
(5) (அ) அகழப்பட வேண்டிய,
(ஆ) குழப்பப்பட வேண்டிய,
(இ) நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய,
(ஈ) கையாண்டுதீர்க்கப்பட வேண்டிய,

எல்லாப் பொருட்களினதும் விவரணம் :

(6) மேலே பந்தி (3) இல் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியின்போது படிப்படியாக நடாத்தப்பட வேண்டிய புனரமைப்பு வேலையின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு :
(7) நிதிசார் செயல்நிறைவேற்ற உத்தரவாதம் :

(8) உயர்தரக் கனிப்பொருள்வள ஆய்வின்கீழுள்ள இடப்பரப்பின் படம் :

குறிப்பு :- உயர்தரக் கனிப்பொருள்வள ஆய்வு முன்னிலைமீட்புத் திட்டம் - அந்தஸ்தும் நாளதுவரையாக்குகையும்" என்பது, ஏற்புடையற்பாலவிடத்து, ஒவ்வொரு வருடாந்தத் தொழில்நுட்ப வேலையறிக்கையினதும் நிலையான பிரிவொன்றாக உள்ளடக்கப்பட வேண்டும் (படிவம் 11)."

(8) படிவம் 2.3 றை உடனடுத்துப் பின்வரும் படிவத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

(ஒழுங்குவிதி 4 (1) )
படிவம் 2.4

**கனிப்பொருள்வள ஆய்வு உரிமம்**

**கைமாற்றுகைக்கான விண்ணப்பம்**

1. உரிம இல. :-
2. கைமாற்றுபவரின் பெயர் :-
3. கைமாற்றம் பெறுபவர் பற்றிய தகவல்கள் :

(அ) தனியாள்

(i) விண்ணப்பகாரரின் /அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் பெயர் :
(ii) முகவரி :
(iii) நாட்டினம் :
(iv) உயர்தொழில் :
(v) இலங்கையில் :
(அ) தொழிலிடம் :
(ஆ) வதிவிடம் :
(vi) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமை பற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) முன்னைய 6 மாத விபரங்களுடன் ஒரு நடப்பு வங்கிக்கூற்று

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனிக்காக :
(அ) (i) பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் பெயர் :
(ii) முகவரி :
(iii) தொலைபேசி :
(அ) நிலையான தொலைபேசி -
(ஆ) கையடக்கத் தொலைபேசி -
(இ) தொலைநகல் -

(iv) மின்னஞ்சல் :

(இ) சட்ட/நிதிசார் தரவுகள் :
(i) கம்பனிகள் பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட பதிவுச்சான்றிதழின் பிரதி -
(ii) பணிப்பாளர்களும் பங்குதாரர்களும் பற்றிய விபரங்கள் - இணைக்கவும் கம்பனிகள் பதிவாளரினால் (ROC பதிவுசெய்யப்பட்ட படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 15 இன் பிரதி (கடைசி வருடாந்த விபரத்திரட்டு)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 20 இன் பிரதி (ஏற்புடையதாயின்)
கம்பனிகள் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட படிவம் 13 இன் பிரதி

(iii) மூலதனமாக்குதல் -

(iv) அமைப்பகவிதிகள் -

(v) கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகள் (இணைக்கவும்) -

(vi) உத்தேசிக்கப்பட்ட கனிப்பொருள்வள ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதிசார் இயலுமைபற்றிய எண்பிப்பு (இணைக்கவும்) ஒரு பட்டயம் பெற்ற கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நடப்பு நிதிசார் கூற்றொன்று முன்னைய 6 மாத விபரங்களுடன் ஒரு நடப்பு வங்கிக்கூற்று

(vii) பங்குவைத்திருக்கை - உள்நாட்டு : ........% வெளிநாட்டு ...........%

(viii) பங்குதாரர் ஒரு கம்பனியாகவிருப்பின், பின்வருவனவற்றை இணைக்கவும் : பதிவுச்சான்றிதழ்- /கூட்டிணைக்கப்பட்ட நாடு

பணிப்பாளர்களும் பங்குதாரர்களும் பற்றிய விபரங்கள்

படிவம் 1 இன் பிரதி (பக்கம் 1 மற்றும் 2)

படிவம் 15 (கடைசி வருடாந்த விபரத்திரட்டு)

4. தொழில்நுட்ப /உயர்தொழில்சார் தரவுகள் :

(அ) கோரப்பட்ட இடப்பரப்பின் மீற்றர்முறை பெயர்குறிப்பு :

(1:50,000 அமைவிடப் படத்தையும் அலகு இனங்காணல் படிவம் 2.3 றையும் இணைக்கவும்)

(ஆ) கருத்திட்டக் குழுவினரின் உயர்தொழில்சார்/தொழில்நுட்ப அறிமுகச்சான்று மடல்கள் (இணைக்கவும்) :

(இ) கருத்திட்ட உத்தேசம்

5. கைமாற்றத்துக்கான காரணம் :

6. கைமாற்றத்தின் நியதிநிபந்தனைகள் :

7. உரிமக்கட்டணப் பற்றுச்சீட்டு (இணைக்கவும்):

கீழே கையொப்பமிட்டுள்ள நான்,இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கூற்றுக்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் சான்றுப்படுத்துவதுடன் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் பொறுப்பேற்கின்றேன்.

சாட்சி :.........................................

கையொப்பம்
(கைமாற்றம் பெறுபவர்)

பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரம் :
திகதி :

கையொப்பம்
(பணிப்பாளர் தலைமையதிபதி)

EOG 01 - 0014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.